www.tamilarangam.net

# சஞ்சீவி

மலர் 1

இலவசம்



FØRSTE UDGAVE.


GRATIS



COLOMBES
SUR -
FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# உள்ளடக்கம்
# Indhold


| | |
|---|---|
| முன்னுரை | 2 |
| திக்கெரோன் விளக்கவுரை | 3 |
| கவிதை "கனவு" | 4 |
| சிறுகதை (இரண்டு) | 5 |
| ABEKAT | 7 |
| சிறுவர் அரங்கம் | 9 |
| இதுதான் நாகரீகமா கட்டுரை | 14 |
| BLIVER DER ALDRIG FRED | 16 |
| சிரிக்கச் சிந்திக்க | 17 |
| குறுக்கெழுத்துப் போட்டி | 19 |
| கவிதை "வா அருகே" | 23 |
| நிகழ்வுகள் நகர்கின்றன சிறுகதை | 24 |
| சஞ்சீவியின் பக்கம் | 28. |


எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லதே எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.
-பாரதி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# முன்னுரை

www.tamilarangam.net

அன்பான வாசகர்களே!

"சஞ்சீவி" என்னும் இந்நூல் ஹொல்ஸ்ரபுரோ தமிழ்-டனிஷ் நட்புறவுச் சங்கத்தின் சார்பில் வெளியிடப்படும் மாதாந்த சஞ்சிகை.

வாசகர்களாகிய உங்கள் அனைவரது ஒத்துழைப்பே இந்நூல் [illegible] வெளிவரக் காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல் பொழுதுபோக்கு அம்சங்களை மாத்திரம் கொண்டதாக இல்லாமல் சிந்தனைக்கு விருந்தாகவும் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான கருத்துக்களைத் தரும் ஒப்பற்ற நூலாக விளங்கவேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

எமது இதழுக்கு தரமான ஆக்கங்கள் வாசகர்களாகிய உங்களிடமிருந்து கோரப்படுகின்றன. கட்சி, மதம், இனம், மொழி சார்பு அற்ற உங்கள் சொந்த ஆக்கங்கள் வரவேற்கப்படும்.

"சஞ்சீவி" என்ற நாமம், இந்த நூலுக்குப் பெயரிட்டுள்ளோம். 'சஞ்சீவி' என்றால் 'மருந்து' என்பது பொருள். உடல் நோயை இல்லாமலாக்குவது மருந்தின் தன்மை. அது போன்று இந்நூலில் வருகின்ற அம்சங்கள் சிந்தனைக்கு விருந்தாக மாத்திரமல்லாமல் மனக்கவலைகளை நீக்கவல்ல மருந்தாகவும் அமைகின்றது என்பதுதான் "சஞ்சீவி" என்பது பொருத்தமானதாகும்.

"வாசகர் அரங்கம்" என்னும் பகுதி வாசகர்களின் விமர்சனம், கருத்துக்கள் இடம் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். இந்நூல் பற்றிய சிறப்புக்கள், குறைகள், தவறுகள், பற்றிய கருத்துக்கள் மாத்திரமல்ல பத்திரிகை மேலும் தரம் உயர்த்தப்படக்கூடிய வகையில் நல்ல ஆலோசனைகளையும் எதிர்பார்க்கிறோம்.

வாசகர்களாகிய உங்களின் [illegible] ஒத்துழைப்பாலும், உற்சாகத்தாலும் இப்பத்திரிகை வளர்ச்சியடைந்து ஆரோக்கியம் மிக்க ஓர் மருந்தாக இனிய விருந்தாக திகழ்வதற்கு விளங்க இறையருளை வேண்டி சங்கத்திற்கு உதவி நல்கிய அனைவருக்கும் நன்றி கூறி [illegible] உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

ஆசிரியர் குழு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## திருக்குறள் விளக்கவுரை.

" வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல."

[பதவுரை]

வேண்டுதல் – ஒரு பொருளை விரும்புதலும்.
வேண்டாமை – ஒரு பொருளை விரும்பாதிருத்தலும்
இலான் . இல்லாதவனாகிய இறைவன்
அடி சேர்ந்தார்க்கு – பாதங்களை அடைந்து வணங்கியவர்களுக்கு
யாண்டும் எப்பொழுதும்
இடும்பை - துன்பம்
இல - இல்லை.

[கருத்துரை]

ஒரு பொருளை விரும்புதலும், ஒரு பொருளை வெறுத்தலும் இல்லாதவனாகிய இறைவனது பாதங்களை அடைந்து வணங்கியவர்களுக்கு ஒரு போதும் துன்பங்கள் இல்லை.

(அறத்துப்பால்.)
குறள் இல 4.

பொன் மொழி

பணம் வெறும் சந்தோஷத்தைத்தான் கொடுக்கும். ஒழுக்கமும் யோக்யதையும் தான் ஒரு மனிதனுக்கு இன்பத்தினையும் கொடுக்கும்.

-யாரோ-


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கதை



பாதியில் முடிந்த கதை
பூவையர்க்கு உகந்ததில்லை,
சேரியிலே பிறந்த கதை
சரித்திரங்களானதில்லை,
போலியாய் வளர்ந்த கதை
புத்தகங்களானதில்லை.
முள் வேலிதனில் வீழ்ந்த கதை
முழுமை பெற்று நின்றதில்லை,
அறிவிலிகள் உரைத்த கதை
அறிஞர் மனம் நிறைந்ததில்லை,
முகவுரை அற்ற கதை
முடிவுரை பெற்றதில்லை,
நல்ல தமிழ் அற்ற கதை
நினைவுகளில் நிலைத்ததில்லை,
செருக்கு மிகு நாவலர்கள் வகுத்த கதை
சீர் கொள் மனிதன் முன் பயன்களில்லை
புத்தர் பெருமான் சொன்ன கதை
போதிமரச் சாத்தார்க்கில்லை,
இதில் நான் சொன்ன கதை
என் மனதில் எழுந்த கதை-



- யொனி -

www.tamilarangam.net

# குரங்கு



ஒரு நாள் ஒரு குரங்கு ஒரு மனிதனைச் சந்தித்து "கோடி வருடங்களுக்கு முன்னர் நீயும் கூட என்னைப் போல் குரங்காகத் தான் இருந்-தாய், இன்று ஒரு நாள் மட்டும் ஏன்? நீ குரங்-காய் மாறி வாழ்க்கையை எங்களைப் போல் அனுபவிக்கக் கூடாது? என்று கேட்டது.

முதலில், அந்த மனிதன் தயங்கினாலும் சிறிது யோசனைக்குப் பின் "ஒரு நாளை-க்கு மட்டும் என்னை குரங்காக மாற்றிக் கொள்கின்றேன்" என்றான்.

குரங்கு சந்தோசமடைந்தது. அப்ப-டியானால், உன் தோலைக் கழற்றிக் கொடு என்னிடம் நான் மனிதனாக மாற்றிக் கொள்கின்றேன் என்றது.

அவர்கள் தத்தம் தோலை மாற்றிக் கொண்டார்கள். மனிதன் குரங்காகவும் குரங்கு மனிதனாகவும் மாற்றம் நிகழ்ந்தது.

மனிதக் குரங்கு மரத்தில் ஏறிக் கொள்ள குரங்கு மனிதன் அலுவலகம் சென்று மனிதனாக வேலை பார்க்கச் சென்றான்.

www.tamilarangam.net

மீண்டும் இருவரும் மாலையில் சந்தித்துக் கொண்டார்கள். குரங்கு மனிதன், மனிதக் குரங்கிடம் மிகவும் அலுப்படைந்த குரலில் சகோதரா? நான் மனிதனாக இருப்பது அவமானமாக இருக்கின்றது. தயவு செய்து என் தோலைத் திருப்பித் தா. இந்தா உன்னுடையது என்றது.

மனிதக்குரங்கு "பல கோடி வருடங்களாக நான் மனிதனை வசித்து வருகின்றேன். ஏன்? நீ குறைந்தது ஒரு வருடமாவது மனிதனைப் போல வசித்துப் பார்க்கலாமே? என்று சொன்னான்.

அந்தக் குரங்கு அழத் தொடங்கியது. சகோதரா? "இவ்வளவு கொடூரமாக நடந்து கொள்ளாதே"

ஆனால் மனிதக்குரங்கு ஒவ்வொரு கிளையாகத் தாவித் தாவி காட்டுக்குள் மறைந்தது

குழப்பமடைந்து போன குரங்கு மனிதன் அலுவலகத்தில் வேலைபார்க்கத் திரும்பிப் போனது.

அதன் பின்னிலிருந்து மனிதன் குரங்காகவும், குரங்கு மனிதனாகவும் வாழ்ந்து வருகின்றார்கள்.

-நன்றி. பாலம்-

Lars: Hvad koster den Mazda. De har der?

Erik: 120,000 kroner.

Lars: Uha, da; Hvad koster så Volvo en derovre

Erik: 155,000 kroner.

Lars: Uha, da da; Hvad så med sportvognen i vinduet?

Erik: Den koster Uha, da da da da da da da.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ABEKAT



Der var en gang en abekat som mødte en mand
Abekatten fortalt manden, at for mange tusind
år siden var manden også en abekat.
Abekatten spurgt til manden: vil du være som
en abekat for en dag?. For jeg vil godt være
som et menneske.

Først var manden lidt i tvil, men efter han
havde tænkt over det sagde han: jeg vil godt
prøve at være som en abekat for kun en dag.

Abekatten blev meget glad og sagde: du skal
tage dit skind af og give den til mig, så jeg
kan blive som et menneske.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Abekatten og manden blev enige om at bytte deres skind. Sådan at manden blev til en abe og abekatten blev til et menneske.

Manden som nu er en abe skulle ud i skoven og klatrede op i træerne abekatten skulle ind til byen og arbejde på et kontor som et menneske.

om aftenen mødtes manden og abekatten spurgte hinanden, om hvordan det gik. Abekatten sagde: Min kære ven, jeg vil ikke være som et menneske mere. Memmeske livet er meget sørgeligt. Det er svært for mig, at leve som et menneske. Derfor jeg vil gerne have mit skind tilbage.

Men manden sagde til abekatten: Tænk at mine forfædre har været mennesker i mange tusind år og jeg har også været menneske i mindst 100 år.
Abekatten begyndte at græde og sagde.
nej, min ven, du skal ikke behandle mig så slemt.
Men manden var ligeglad, han hoppede fra træ til træ og forsvandt.

Den forvirrede abe vendte tilbage til byen for at leve som et menneske. Fra den dag aflevede manden som en abe. og abekatten måtte leve som et menneske.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுவர் அரங்கம்

## கொன்றை வேந்தன்.

### எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்!

எண் என்றால் என்ன?. கணக்கு. கணிதம் என்பதாகும். எழுத்து என்றால் இலக்கணம். "எண்ணெழுத்திகழேல்" என்பது ஒளவை அருளிய ஆத்திசூடி வாக்கு. "கணக்கையும் இலக்கணத்தையும் இகழாதே" என்பதுவும் ஆத்திசூடியின் அறிவுரையாகும்.

எண்ணையும் எழுத்தையும் இகழக்கூடாது என்பதற்கு கொன்றைவேந்தன் ஆசிரியர் காரணம் கூறுகிறார். "ஒரு மனிதனுக்கு இரு கண்கள் எப்படியோ, அதே போன்று கணிதமும் இலக்கணமும் மனித வாழ்வுக்கு மிகவும் அத்தியாவசியமாகும்." கண் இல்லாவிட்டால் எம்மால் பொருட்களை பார்க்க முடியாது. கண் பார்வை இழந்தவர்கள், இல்லாதவர்களது வாழ்வு இருண்ட வாழ்வாக அமையும். அது போல கணிதமும் இலக்கணமும் கற்காதவன் வாழ்வு இருள் நிறையும் அற்றதாகவே அமையும் என்பதே இதன் விளக்கமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எழுத்துக்கள்

| | | | |
|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ |
| உ | ஊ | எ | ஏ |
| ஐ | ஒ | ஓ | ஔ |

ஃ

12ம் பக்கத்திலுள்ள சிறார்களின் சிந்தனைக்கு என்ற பகுதியில் வெளிவந்துள்ள கேள்விகளுக்கு சரியான பதில் எழுதும் சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். உங்கள் பதில்களை 12.08.89 க்கு முன்னர் Tamilsk - Dansk Venskab forening, Danmarks gade 10, 7500-Hol tebro. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ா | ி | ீ | ு | ூ | ெ | ே | ை | ெ-ா | ே-ா | ெ-ள | |
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ | க் |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ | த் |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ | ப் |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ | ன் |

www.tamilarangam.net

# சிறார்களின் சிந்தனைக்கு,

1. இலங்கையின் தலைநகர் எது?
(யாழ்ப்பாணம், கொழும்பு, காலி)
2. டென்மார்க்கின் தலைநகர் எது?
(வாஷிங்டன், கொப்பன்கவுன், புதுடெல்லி)
3, திருக்குறள் இயற்றியவர் யார்?
(கம்பர், திருவள்ளுவர், வியாசர்)
4, ஐரோப்பாவின் முதல் சர்வகலாசாலையை அமைத்த கிரேக்க தத்துவ ஞானியின் பெயர் என்ன?
(சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில்)
5. யாழ்ப்பாண இராசதானியை ஆண்ட கடைசி மன்னன் யார்?
(குட்டகைமுனு, எல்லாளன், சங்கிலியன்)
6. இலங்கையின் முதலாவது தீயணைக்கும் படை எந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்டது?
(போர்த்துக்கேயர், ஆங்கிலேயர், ஒல்லாந்தர்)
7. உலகிலேயே பெரிய கண்டம் எது?
(அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா)
8, முதல் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு எந்த ஆண்டு நடைபெற்றது? எங்கே?
(1945, 1899, 1966)
(யாழ்ப்பாணம், கோலாம்பூர், சென்னை)
9. இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது எந்த நாட்டில் முதன்முதலாக அணுகுண்டு போடப்பட்டது?
(சீனா, யப்பான், கனடா)
10, இலங்கையின் முதல் பெண் பிரதம மந்திரி யார்?
(இந்திரா காந்தி, சிறிமாவோ பண்டாரநாயக்கா, மார்க்கிரட் தட்சர்)

www.tamilarangam.net

# தமிழ் மொழியில் புகுந்த பிற மொழிச் சொற்கள்.

வியாபாரத் தொடர்பு, அரசியல் ஆதிக்கம் குடியேற்றம் முதலிய காரணங்களால் ஒரு மொழி பேசும் மக்கள் வேற்று மொழி பேசுபவர்களோடு தொடர்பு கொள்வர். இதனால் மொழிக்கலப்பு உண்டாகிறது. தமிழிலே அன்றுமுதல் இன்றுவரை பல மொழிகளில் இருந்து சொற்கள் கலந்துள்ளன.

பதினைந்தாம் நூற்றாண்டிலே ஐரோப்பியர் தமிழ் நாடுகளுக்கு வரத்தொடங்கினர். அவர்களில் முதன் முதலாக வந்தவர்கள் போத்துக்கீசர்களே. அவர்கள் தொடர்பால் சில போத்துக்கீசச் சொற்கள் நாம் அன்றாடம் பேசப்படும் சொற்களுடன் கலந்துள்ளன. உதாரணமாக அலுமாரி, அலவாங்கு ஏலம், கடதாசி, கதிரை, கோப்பை, பீங்கான், வாங்கு, ஜன்னல் என்பன போத்துக்கீச மொழிச் சொற்களாகும்.

போத்துக்கீசருக்குப் பின் ஒல்லாந்தர், டச்சுக்காரர் சிறிது காலம் தமிழ் நாட்டை ஆட்சி செய்தனர். அவர்களது ஆட்சிக்காலத்தில் டச்சு மொழிகள் இடம் பெற்றுள்ளன. உதாரணம்:- உலாந்தா, கக்கூசு, சாக்கு, துட்டு, தோம்பு என்பன.

ஆங்கிலேயர் ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளாக அரசாட்சி செய்தனர். இதனால் பல ஆங்கிலச் சொற்கள் தமிழ் மொழிச் சொற்களோடு இணைத்துப் பேசப்பட்டு வருகின்றது. அலுன்ஸ், சீமெந்து, சைக்கிள், பெற்றோல், பென்சில், கவுண்டர், போன்றவை உதாரணங்களில் சில.

தமிழ் மொழியோடு பிற மொழிச் சொற்கள் சேர்த்துப் பேசப்பட்டு வருவதால் தமிழ்ச் சொற்கள் புறக்கணிக்கப்படுவது மாத்திரமல்லாமல் தமிழ் மொழியின் பெருமையையும், வளர்ச்சியையும் பாதிப்பதாக அமைகிறது.

- கமலா -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இதுதான் நாகரிகமா ?

வாழ்வில் மனிதன் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நெறிமுறைகள், மதநூல்களும், புராணங்களும் தெளிவாகக் கூறியுள்ளன.

நல்லொழுக்கம், நற்பண்பு, இறைபக்தி. ஆகியன எமது நல்வாழ்வின் மூலாதாரங்கள்.

பிறரை நேசித்தல், பிறருக்கு உதவும் மனோபாவம்; சூது, பொறாமை, வஞ்சகம், பொய், களவு, பிறரை இகழாமை என்கின்ற தீய குணங்கள் இல்லாத நல்ல இயல்புகள் பொருந்திய ஒழுக்கமுள்ள வாழ்வானது ஒப்புயர்வற்ற உன்னத வாழ்வாக அமைகிறது என்பதை நூல்கள் வலியுறுத்து- கின்றன.

இன்றைய மனித சமூகத்தின் வாழ்க்கை முறையானது மதநெறிமுறைகள், பாரம்பரியங்கள், கலாச்சாரங்கள் என்பவற்றிலிருந்து வேறானதாக அமைந்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

மனிதன் நாகரிகமடையத் தொடங்கிய நிலையிலிருந்து அவனது தேவைகள் பல்கிப் பெருகி வருவதைக் காண்கிறோம். தேவைகளைப் பூர்த்தி செய்வதே வாழ்வின் குறிக்கோளாக அமைந்துள்ள நிலையில் , ஒருவன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழிகளை மேற்கொள்ள. பல வழிகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது சமூகத்தில் போட்டி, பொறாமை, சூது, ஏமாற்று, ஒழுக்கக் கேடுகள் என்பன இடம் பெறுகின்றன.

நாகரிகம் நிறைந்த சமூக அமைப்பினில் ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கை முறைகளை மாற்றிக் கொள்ள நேரிடுகிறது. இதன் காரணமாக மத நெறிகள், பண்பாடு, கலாச்சாரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட வாழ்வு முறை இன்று

www.tamilarangam.net

நாகரிக காலத்துக்கு ஏற்றவாறு மாற்றப்படுகிறதையும் காண்கிறோம்.

தேவைகள் இல்லாமையையும் நியாயமானதையும் இருப்பின் அவை நிறைவேற்றப்படும் பட்சத்தில் அமைதிக்கும் தேவை உண்டென்றுவதாக அமையும். மாறாக தீய நோக்கங்களின் அடிப்படையில் ஏற்படுகின்ற தேவைகள் நிறைவேற்றப்படுவதால் தீய இயல்புகள் ஒன்று சேர்ந்த வாழ்க்கை முறை ஏற்படுகிறது. இதன் காரணமாக மக்கள் மத்தியில் ஆறுதலில்லை, நற்பண்புகள் அருகி வருவதைக் காண்கிறோம்.

இப்படிப்பட்ட காலகட்டத்தில் மனித சமூகங்கள் மாறுபாடான வாழ்க்கை முறைகளை மேற்கொள்வதை காண்கிறோம். அதிகாரத்துவங்களுக்கு பரிச்சயமாகிவிட்ட சூழலில் வாழ்பவர்கள், வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள் அவர்களது வாழ்க்கை முறை அவர்களது வாழ்வின் இலக்குகளாக, இலட்சியங்களாக அமைந்துவிடுகிறது. அத்தகைய வாழ்க்கை முறை நியாயமானது என்ற மனோ நிலையில் வாழ்பவர்கள் மிக விரைவு சக்திகளாக மாறி விட்ட நிலையில் அராஜகம், அடக்குமுறைகள், மனிதவதை, ஏமாற்று, மோசடி, பதவி மோகம், எதேச்சாதிகாரம் என்பவற்றை இலகுவாக்கிக் கொள்கிறார்கள், இத்தகையவர்களது இலக்குகளாக மக்களது அபிலாசைகள், சந்தோசம் என்பன பலியிடப்படுகின்ற நிலையை வேகமாக்கக்கூடியதாக இருக்கிறது. மதக் கோட்பாடு, நற்பண்பு, கலாசாரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வாழ்பவர்கள், வெவ்வேறு மனக்குறைபாட்டினை அனுபவிக்க வேண்டி இருப்பதையும் காண்கிறோம்.

ஆகவே

மனித சமூகத்தில் நாகரிகம் என்ற அடிப்படையில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு இடமளிக்காமல் எமது வாழ்க்கை முறையானது இறை பக்தி, நற்பண்பு, ஒழுக்கம், என்பவற்றுக்கு அமைவாக அமைய நாமெல்லோரும் நல்ல நெறி முறைகளைக் கையாள்வது அவசியம். அதன் மூலம் அமைதி, சமாதானம், அன்பு என்னும் அடிப்படையில் அமைந்ததொரு சமூகத்தை தோற்றுவிக்கலாம்.

கெ. ஆர்:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Bliver der aldrig fred?

Jeg læser min avis hver morgen
og prøver at glemme sorgen
Sorgen over spørgsmålet krig
og mit spørgsmål det vil bli
Bliver der aldrig fred?.

Artiklen om Iran og Irak
Det er noget værre snak,
hvorfor ikke slutte fred
i stedet for at blive ved
Bliver der aldrig fred?.

Atombomben Bliver taget frem
Nu kan vi godt gå hjem
hjem og vente på
at jorden går i stå
Bliver der aldrig fred?

Lene 15 år



www.tamilarangam.net

# சிரிக்கச் சிந்திக்க!!!

## யாரின் தவறு.

சுமார் ஆறுமணியிருக்கும். வானம் ஸ்ரேளை பூவாய் மெல்லெனத் தூவியது. இலேசான குளிர். இருந்தாலும் உடலுக்கு இதமாய் இருந்தது. நானும் ஆனந்தனும் சைக்கிளில் இருந்து இறங்கிறோம்.

"ஆ... தம்பியவை.. வாங்கோ" லிங்கமண்ணை வரவேற்றார். "ஆ... வாங்கோ... வாங்கோ" அக்காவும் இன்முகம் காட்டுறார். உள்ளே வந்திருங்கோ..

"தம்பியவை கடைசியாய் வந்த படம் பார்த்தனியளோ?"

ஐயோ... வேண்டாம் அண்ணை, ஏதாவது பாட்டுக்கிடந்தா போடுங்கோ....

"இவருக்கு நெடுகப் பாட்டுந்தான்" ஆனந்தன் முணுமுணுத்தான்.

மெல்லிய இசையோடு இளையராஜாவின் புதிய பாடல் ஒன்று தொடங்கியது. ஒவ்வொரு கருவிகளிலும் இளையராஜா இழையோடுறான்.

ஒருகணம் என்னை மறந்தேன்.

ஆ... ஆ... ஆ... என்ற இரைச்சலோடு குழந்தை ஒன்று வீரிட்டு அழுதது..

"இவள் ஏதோ நுத்தவள் அழுத்து விட்டாள் போலே" லிங்கமண்ணை எழுந்து போறார்.

"தம்பி என்ன நடந்தது"

அவன் ஏதோ டெனிஷில் சொல்லுகின்றான்.

"தம்பி அத்தான் நான் சொன்னனான் தமிழிலே கதையுங்கோ"

"என்ன நடந்தது"

தகப்பனது கேள்வியைத் தெளியப்படுத்துவதற்கா அவன் இயலக் கூடிய வகையில் முயன்றான். முடியவில்லை, அவன் மீண்டும் டெனிஷில் ஏதோ சொல்லுகின்றான்.

எத்தனை தரம் சொல்லுறது தமிழிலே.....

பின்னை வழி தெரியாது முழிக்கின்றான்.

அவனால் தனது பிரச்சினையை தமிழில் தெளிவுபடுத்த முடி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-யவில்லை.
தகப்பனால் பிள்ளையின் பிரச்சினையை டெனிசில் புரிந்து கொள்ள முடியவில்லை.
"பிள்ளை நீ சொல்லு என்ன நடந்தது." மகளைக் கேட்கிறான்,
அவளும் "Han er...... என்று ஏதோ இழுக்கின்றாள்.
"பிள்ளை! உங்களுக்கு எத்தனை தரம் சொல்லுறது தமிழிலை கதையுங்கோ கதையுங்கோ என்று"
"என்ன நடந்தது" லிங்கன்ரை கோபத்தோடு விசாரிக்கின்றார்
Første.... அவள் மீண்டும் டெனிசில் இழுக்கின்றாள்.
பிள்ளை... லிங்கன்ராவால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.
இருவரையும் மாறி மாறி தாறுமாறாக விளாசுகின்றார்.
கண்டறியாத பாசையாலை ஒன்றும் செய்ய முடியாமைக் கிடக்கு.... லிங்கன்ரை கோபத்தோடு வெளிவருகின்றார்.
பிள்ளைகளுக்குள் என்ன தான் நடந்தது என்று லிங்கமன்றையாலோ, அல்லது எங்களாலோ-யோ புரியாமல் இருந்தது.

—முரளி—

## அட்டைப்பட விளக்கம்,

விநாயகர், பிள்ளையார் கணேஸ் என்று பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படும் முதன் முதற் கடவுள் தான் எல்லாத் தொடக்க காரியங்களுக்கும் நினைத்து தொடங்கப்படுகின்றது.

ஆனால் பொதுவாக இன்று எல்லா நாடுகளிலும் நவீன ஓவியங்கள் பற்றி அதிகமாகப் பேசப்பட்டு வருகின்றது. இந்த நவீன ஓவியம் அது சம்பந்தமான வளர்ச்சி முதலாம் உலகப் போருக்குப் பின்னர் தான் ஐரோப்பிய நாடுகளில் வளர்ச்சியடைந்தது என்பது எல்லோராலும் அறியப்பட்ட ஒன்றாகும்.


ஆனால் கி.மு. 800 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பிள்ளையார் சிலை மிகவும் நவீனத்துவமாக வடிக்கப்பட்டுள்ளது என்பதும், இன்றைய நவீன வடிவங்களில் பிள்ளையாரிலேயும் தொன்மையாக விளங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

-சிவா-

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி :
# KRYDS OG TVÆRS:

1



## குறுக்கெழுத்துப் போட்டி இல: “ஒன்று”

“சஞ்சீவி” உங்களுக்காக வழங்கும் - குறுக்கெழுத்துப் போட்டிக்கு அனைவரையும் மகிழ்வுடன் அழைக்கிறது.

சஞ்சீவிக்காக நீங்கள் செய்ய வேண்டியது, குறுக்கெழுத்துக் கட்டங்களை வெற்றிடங்களை, கீழே கொடுக்கப்படும் இடமிருந்து-வலம், மேலிருந்து கீழ், போன்ற கேள்விகளுக்கு சரியான விடைகளை எழுதிப்-பூர்த்தி செய்ய வேண்டியதே.

விபரங்கள் கீழே உள்ளன:-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேள்விகள்:

இடமிருந்து வலம்:-

1. எமது பாரம்பரியமான இதனை டென்மார்க்கில் (Godag) கூட அறிவர்.

7. இது ஓர் உணவுப் பண்டம்.

15. இதனை இவர் முயற்சி எடுத்து வெல்வர். வேகமாய் ஓடியதால் இது இங்கு இடம் மாறியுள்ளது.

19. இது தனக்குரிய "—" முறையைத் தாண்டியிருக்கிறது.

22. இடமிருந்து வலம் 15 வது பதிலுக்கு பயிற்சி செய்ய இது உதவும்.

30. அன்று கோதையர்க்கு இவன் பல லீலைகள் செய்தானாம்.

37. ஏதோ ஒரு "—" சத்திர சிகிச்சை செய்யப்பட்டதால் மாறியிருக்கிறது.

46. நீங்கள் பிழையின் எதிர் கருத்துள்ள ஒன்றைச் செய்ததாலோ என்னவோ "இது" தன்னை இனங்காட்டியிருக்கிறது.

52. இறுதியிற் சொல்லவேண்டியதை இது இப்போது சொல்லியுள்ளது.

57. இந்த இனிய குழலால் கடியகல்லைக்கூட உருகவைக்க முடியுமாம். முயற்சியுங்கள்.

73. இந்தப் பெயரை வைத்துப் படம் எடுத்தவர்களுக்கு கடந்த காலத்தில் சிறந்த படத்திற்கான பரிசில்கள் கிடைத்ததாம், படத்தை இயக்கியவர் இலண்டன் வாழ் இலங்கைத் தமிழர்.

76. இடமிருந்து வலம், 73 வது பதில் "இங்கு" விழாக் காணத் தயாராகிறது.

கேள்விகள்:

மேலிருந்து கீழ்:-

1. சக்கரங்கள் இருந்தால் இது ஓடும்.

2. பல நாடுகளை நீங்கவைத்துள்ள இது தனது வீச்சத்தினால் இங்கேயும் விலகியிருக்கிறது.

7. கனவு தோன்ற விசித்திரமாக வந்த கதையே இது.

9. கடன் கொடுத்தவர் நெஞ்சம் கலங்குவது இதனாலே ஆனால் இன் குழப்பம் இங்கும் தீரவில்லை. (ம.ப.பா)

www.tamilarangam.net

15. பாரதம் தேசியமென்றால், இவரைத் தெரியும், ஆனால் இவர் இந்த தலைகாரணமாக இருந்தார்.

22. நீதிமன்றும் இதையே சாட்சியிடம் எதிர்பார்க்கிறது, ஆனால் கலியுகத்தில் இருக்கு என்றும் குழப்பமே.

30. பயந்த மனம் கொண்டவர்கள் இதனைக் காணும் போது பேய் என்பார்களாம். வெண்மையான ஒளியின் ஆரம்பத்திலும் இது இருக்கிறது என விஞ்ஞானிகள் காரணம் சொல்கிறார்கள்.

35. தமிழர் விழாக்களில் இடம்பெறும் முக்கனிகளில் இதன் பழமும் ஒன்றாம். தாயும், பிள்ளையும் தனித்திருக்கிறார்கள்.

37. பொன் கிடைத்தாலும் இது கிடைக்காதென்பர் பெரியோர்.

50. இது பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டுமாம்.

54. இது தனது தனித் தன்மையைக் காட்டி குழம்பி நிற்கிறது. இதனை எமது நாட்டுச் சந்தைகளின் மலிந்த இடங்களிற் காணலாம்.

58. இதனை உண்ணுதல் பாவமென்று பல மதங்கள் சொல்லுகின்றன. இது இங்கு கீழிருந்து மேலாக உள்ளது...

65. இது கூடுதலாக அழிக்கப்பட்டால் மழை வீழ்ச்சி குறையுமாம்.

....——————....

## வாசகர்களின் கவனத்துக்கு!

காதலுக்கும் வேறு செய்தித் தொடர்புகளுக்கும் பாவிக்கப்பட்ட புறாவை சமாதானத்துக்காகத் தீட்டிவிட்டான் ஓவியன் "பிக்காசோ" ஆனால் இது சம்பந்தமான; 38ம் பக்கத்திலான படத்துக்கு வாசகர்களாகிய உங்களிடமிருந்து எந்த வகையிலான அமைந்த ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. சிறந்த ஆக்கத்துக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

ஆசிரிய குழுவின் முடிவே இறுதி முடிவாகும். இது சம்பந்தமாக வரும் ஆக்கங்களைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரிய குழுவுக்கு உரிமையுண்டு.

www.tamilarangam.net

கவனிக்க:-

## குறுக்கெழுத்துப்போட்டி சம்பந்தமான - விபரங்களும் நிபந்தனைகளும்.

1. சஞ்சீவி மாத இதழ் உறுப்பினர் தவிர்ந்த மற்றும் யாவரும் பங்கு கொள்ளலாம்.

2. போட்டியில் பங்குகொள்வோர், கட்டங்களைத்தையும், அத்துடன் சரியான முகவரியையும் தெளிவாக எழுதி எதிர்வரும் 12.8.89 .. திகதிக்கு முன்னதாக CHANCHIVE, K.T.01, TAMILSK DANSK VENSKABSFORENING, DANMARKS GADE 10, 7500 HOLSTEBRO, என்ற முகவரிக்கு கிடைக்கும்படியாக அனுப்புதல் வேண்டும்.

3. தபாலுறையின் வலது கீழ் மூலையில் சேரிட முகவரியும், இடது மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி" என குறிப்பிட்டும், மறுபக்கத்தில் அனுப்புபவர் முகவரியும் இருத்தல் வேண்டும்.

4. போட்டி முடிவுகள் பத்திரிகைக் குழு நடுவரால் முடிவுசெய்யப் படும்.

5. மேற்கண்ட விதிமுறைகளுக்கமையவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்ட போட்டிக் கூப்பன்கள் சீட்டிழுப்பு மூலம் 1ம், 2ம், 3ம் பரிசுகளுக்கான தெரிவைப் பெறும்.

6. வாசகர்கள் யாவரும் இப்போட்டியில் பங்கு பற்றலாம். ஆனால் பத்திரிகையின் அசல் பிரதியே ஏற்றுக்கொள்ளப் படும்.

7. பரிசுகள் உரியவருக்குக் காலக் கிரமத்தில் அனுப்பி வைக்கப் படும்.

8. போட்டி சம்பந்தமான நடுவரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

9. சரியான விடையும், பரிசு பெற்றோர் விபரமும் அடுத்த இதழில் வெளியாகும்.

---

இளமையில் ரோஜா மலர்மீது படுத்திருந்தால்
முதுமையில் முள்ளின் மீது படுக்கவேண்டிவரும்

இஸ்ரேலிய பழமொழி.

www.tamilarangam.net

## வா அருகே.

கவியின் வடிவே - என்
கனியும் அமுதே
காதல் கிளியே - என்
காலங்கள் நீயே!
அலையுடன் அலைந்து
வீசிடும் தென்றலில் - உன்னை
ஆனந்தம் பாடிட
வீணையும் நீயே!
பூந்தளிர் கரங்களின்
போர்வைக்குள் நீந்திட
செந்தமிழ் விளக்கே - என்
சொந்தமே வா அருகே.

- குருசு.



www.tamilarangam.net



# சுவடுகள் நகர்கின்றன.. சிவா.

எழில் கொஞ்சும் இயற்கை வனப்பு மிகுந்தது அந்த மீன்பிடிக்கிராமம்.

கடல் அலைகளின் ஆரவாரம், பறவைகளின் இனியகானம், இருவைக்காரர்களது உற்சாகத் தாளியில் அமைந்த பாடல்களுடன் ஒன்று சேர்ந்து உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மதுரமான இசை பரப்பும், கடல் எல்லையில், கிராமத்தின் அரணாக விளங்கும் கவின் மிகு குன்றுகள், கணவனை வழி அனுப்பிவிட்டு அவன் வருகைக்காக காத்திருக்கும் ஆரணங்குபோல் அஸ்த்தமிக்கும் மாலைச் சூரியனுக்கு கை அசைத்து விடை கொடுத்து அவனது ஒளி முகம் காண காத்திருக்கும் மலர்ச் சோலை; விண் இளம் தென்றலுக்கு சுகந்தம் ஊட்டி நிற்கின்ற பசுமை வனப்பும்; வெண்பஞ்சிறகால் புனைந்து காணும் சுகம் அளித்தும் தருகின்ற பொன் மணற் பரப்பின் மத்தியில் அமைந்துள்ள மீனவர் இல்லங்கள் பாற்கடலில் மிதக்கும் ஓடங்களாக காட்சிதருகின்ற எழில் கொஞ்சும் தோற்றம்;
இவையெல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற அந்த மீன்பிடிக் கிராமத்தின் மத்தியில் அமைந்தது பாபுவு அன்னையது குடிசை.

www.tamilarangam.net

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த சமூகத்தவர்களது சிந்தனையோட்டம் புனிதமான நினைவுகளோடு மேலோங்கியிருந்தது என்பதற்கு பாபுலு அண்ணனுடைய நற்பண்புகள் உதாரணம். நல்ல சமூக அமைப்பு, அனைவரது நல்வாழ்வு என்பவற்றையே அவரது உள்ளத்தில் மேலோங்கிய எண்ணங்கள் நிறைவேற்றப் படுவதற்கு அங்கு உருவாக்கப் பட்ட நூல் நிலையம் ஆரம்ப நடவடிக்கையாக அமைந்தது..

அங்கே நலன் விரும்பிகள் பலர் சேர்ந்து கட்டப்பட்ட நூல்நிலையத் திறப்பு விழாவுக்கு இன்னும் சில தினங்கள் தான் இருந்தன. மனித சமுதாயத்தின் முதுகெலும்பு இளைஞர்கள் என்ற கருத்துக்கு இணங்க நூலகத்தின் அமைப்புக்கு முன்னின்று உழைத்த இளைஞர்களில் குறிப்பிடக் கூடியவர்களில் ஆதவனும் அவனது நண்பர்களான கணேஷ், வேதநாயகம் ஆகியோர்.

× —— × —— ×

பாபுலு அண்ணனுடைய எண்ணம் எல்லாம் வாசிகசாலைத் திறப்பு விழா பற்றியே இருந்தது

பாபுலு அண்ணன் ஏதோ சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்துவிட்டு பெருமூச்சு விட்டபோதே.....
அவரது மனைவி விசயத்தைப் புரிந்து கொண்டு ஒரு சுருட்டைப் பத்தவைத்து இரண்டு இழுவை உறிஞ்சி இழுத்துவிட்டு அவரிடம் நீட்டினாள். அந்தப் பட்சமான மனைவியின் அன்புத் தொல்லையைத் தாங்காது திளைத்துவிட்டார்.....

திறப்பு விழா எல்லாம் சரிதான். இந்தப் பொடியள் என்ன படத்தை வாசிகசாலைக்குள்ள வைக்கப் போறாங்கள்........

இந்தத் தொனிப்பான குரல் பொடியளின் காதில் விழவேண்டுமென்பதே பாபுலு அண்ணரின் நோக்கமாக இருந்தது போலும். அந்த இள நெஞ்சங்கள் இப்படிப்பட்ட வெதுவெதுப்பான கருத்துக்களைக் கேட்டும், எமது எதிர்காலமாவது. உருப்பட்டாற் சரிதான் என்பது போல் அமைதியாக பழைய தைக்கிளைகளையும் இழுத்தெடுத்துக் கொண்டே..... பாபுலு அண்ணரின் உதவி.

www.tamilarangam.net

ஒத்தாசைகளையெல்லாம் ஒருமுறை ஆதவன் நினை-வுக்குக் கொண்டுவந்து இறுதியாகத் தலையாட்டலுடன் மற்ற நண்பர்களையும் அழைத்துக் கொண்டு இடத்தைவிட்டு நகரும்போது இயற்கையும் அவர்களது விளைமையைப் புரிந்து கொண்டது போல் சிறிதாக மழை தூறத் தொட-ங்கியது.

அன்றைய கால கட்டத்துக்கு ஏற்றவாறு முன்னோடியாக நல்லபுதிய விடயங்களைச் செயற்படுத்து-வதும், அந்த உணர்வுகளின் அயராத முயற்சியால் நூல் நிலையமொன்றை பல இடையூறுகளின் மத்தியிலும் சில நல்ல மனங்களின் உதவியால் கட்டிமுடித்திருந்தனர்.

அன்றிலிருந்து இன்றுவரை இந்த நிலையத்தை கட்டிமுடிப்பதற்கிடையிருந்தான், எத்தனை மாற்றங்கள். இந்-காலமுன்னின்று முதுகு கொடுத்த எத்தனையோ இளைஞர்கள் அந்த இடத்தில் இல்லாததும் கவலைதான். அப்படி அவர்கள் அகன்றதற்கும் காரணம் கண்டிப்பான காலத்தின் கனிவு எனலாம். ஆயினும் எந்தவொருகாலகட்டத்திலும் இவ்வொரு எத்தனிப்புகளும் அழகாக நடந்து முடிந்திருந்தது. அதற்கெ-ல்லாம் நன்றிகள் கூறுவதாயின் முதற்கண் ஆதவனுக்கும்-அவனது நண்பர்களுக்குமே உரியது. ஆதவன் எப்போதும் முற்போக்காகவும், புத்திக் கூர்மையுடனும் செயற்படுவான். அவ-னுடன் பள்ளித்தோழர்களாகிய கணேசும், வேதநாயகமும் படிப்பகத் திறப்பு விழா சம்பந்தமாக முழுமையாகவே தம்-மை அர்ப்பணித்திருந்தனர். விழாவுக்கு என்றும் இரு வார-ங்கள் மட்டுமேயிருந்தது. இது சம்பந்தமாக பல முக்கிய-விடயங்களைப் பற்றி படிப்பகக் குழு மிக அவதானமாக-முடிவுகள் எடுத்தன..

மறுநாள் காலை எழுந்த ஆதவன்-என்றும்போல் சுறுசுறுப்பாகச் செயற்பட்டான். தனது தந்தை, சகோதரனுக்கான தேனீரை போத்தலில் விட்டு ஆறாமல் பேப்பரினால் சுற்றியவாறே கண்ணாடியில் முக-த்தை ஒருதடவை காட்டி தலையைச் சரிசெய்துவிட்டு வீட்டிலிருந்து இறங்கினான்....

www.tamilarangam.net

தேனீர்ப் போத்தலை வெய்யிலில் பட மண்ணில் புதைத்து வைத்துவிட்டு, வந்த இரிய களைப்பைப் போக்குவதற்காக மணலுள்காலை புதைத்திருந்தபோதே அவனை-யுமறியாமல் ஏதேதோ நினைவலைகள், எங்கோ கொண்டு சென்றது. ~~[illegible]~~ அருகிலிருந்த கற்களை எடுத்து கடலுக்குள் எறிந்து கொண்டிருந்தது. அவன் கைகள்

ஆதவா....! திடுக்கிட்டுத் திரும்புகையில் கணேஷ் சைக்கிளில் கரைக்கு வந்து கொண்டிருந்தான். அவனைக்கண்ட மகிழ்ச்சியில் என்ன மச்சான் என வினவினான். ஆனால் கணேஷ் மட்டும் வேறு திசையைப் பார்த்துக் கொண்டு பேசாது நின்றான்.

இழிஞ்சது போ! எது மச்சான்... இல்லை ஆதவன் ஐஸ்வான் வந்தது முதல் வா அந்த அவ-லப்பாப்பம்.

(வளரும்)

அன்பான வாசகர்களே!

உங்களிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், நகைச்சுவைத் துணுக்குகள் சிறுவருக்கான ஆக்கங்கள், ஓவியங்கள், மற்றும் மக்களுக்குப் பயன்தரும் பல ஆக்கங்கள் தமிழ்- டெனிஸ் ஆகிய இரண்டு மொழிகளிலும் எதிர்பார்க்கின்றோம். இதோடு "சிரிக்கவும் சிந்திக்கவும்" என்ற விடயத்தையும் பிரத்தியேகமாகச் சேர்த்துள்ளோம்.

"ஆக்கங்கள் யாவும் சொந்த முயற்சியில் இருப்பது விரும்பத்தக்கது"

12.08.89க்கு முன் உங்கள் ஆக்கங்களை தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி பணிவோடு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஆக்கங்களைத் திருத்தவும், சுருக்கவும் ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.


இப்படிக்கு

ஆசிரியர் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## தமிழ் டெனிஸ் நட்புறவுச் சங்க நிர்வாக சபையின் செயற்பாடுகளும், எதிர்கால நடவடிக்கைகளும்.

எமது சங்க அங்கத்தவர்களின் தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்வதே இந்த நிர்வாக சபையின் நோக்கமாகும்; இந்த அடிப்படையில் கலாச்சார சம்பந்தமான விழாக்கள் நடத்துவதற்கும் மேலும் பத்திரிகை ஒன்றை வெளியிடுவதற்குமா தன்னிச்சையாக இயங்கும் இரண்டு சபைகள் தெரிவு செய்துள்ளது.

தற்போது எமது சங்கத்தில் 104 பேர்கள் அங்கத்தவர்களாக உள்ளார்கள். இருந்தாலும் இத்தொகை போதுமானதல்ல, மேலும் மேலும் பல அங்கத்தவர்கள் எம்மோடு சேர்ந்து கொண்டால் மேலும் பல தொழிற்பாடுகள் இலகுவாகவும் சுகமானதாகவும் செய்து கொள்ள கொள்ள வாய்ப்புக்கள் ஏற்படும்.

சங்கத்தின் ஆதரவில் தற்சமயம் கலாச்சார இல்லத்தில் கடை ஒன்று திறக்கப்பட்டுள்ளது, என்பதை அறியப்படுத்துவதில் நாம் மிகவும் சந்தோசம் அடைகின்றோம். இக்கடையின் வியாபார பொறுப்புக்கள் திரு. ரகு திரு. முரளி என்பவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இச்சங்கம் கூடிய நாலு மாதங்-கள் கூட பூர்த்தியாக விட்டாலும், பல பல நடவடிக்கைகளைச் செய்து காட்டியமையிட்டு பெருமிதம் அடைகின்றோம். இருந்தாலும் நாம் பல வேலைப்பாடுகளைச் செய்து கொண்டாலும் நாம் சலிப்படையாமல் மேலும் மேலும் பல ஆக்கங்கள் செய்து கொள்வோம். இன்னும் பல ஆக்கங்கள் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஆறுமாதக் கடைசிப் பகுதியில் நோர்வேக்கு ஒரு சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்-வதாக ஒரு ஒழுங்கு செய்துள்ளது. அத்தோடு எதிர்வரும் இலையுதிர் காலப் பகுதியில் பின்வரும் விடயங்கள் யோ-சனைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

கலாச்சார சம்பந்தமான விழா-க்கள், இலவசமாக பிரத்தியேகப் படங்கள் காட்டுதல், வேறு கலை நிகழ்ச்சிகள், சிறுவருக்கான ஒழுங்குகள், சுற்றுலாக்கள் போன்ற பல விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

வசந்த கால விடுமுறை அணுகிக் கொண்டிருப்பதால் நிர்வாக சபையின் வேலைகள் சிறி-தளவு ஸ்தம்பிதம் ஆகலாம். ஆனால் விடுமுறைக் கா-லம் முடிந்த பின்னர், நாங்கள் மீண்டும் எமது தொழி-ற்பாடுகள் துரிதமாக ஆரம்பிப் போம்.

சிறந்த முறையில் புதுவருட விழாவின் நடாத்தி முடித்த விழாக் குழுவினருக்கு எமது நிர்வாக சபை இதயபூர்வமான நன்றியைத் தெரி-வித்துக் கொள்கின்றது.

"வசந்த கால விடுமுறை இனிதாக அமைய எமது வாழ்த்துக்கள்"

இங்ஙனம்
நிர்வாக சபை சார்பில்
க.கெயத்துரு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## Kort om bestyrelsens arbejdsfunktioner og fremtidsplaner

Bestyresens egentlige arbejde består i at varetage medlemmernes interesser ude kulturelle og festlige arrangementer, hvortil der er nedsat blad og fest udvalg, der i stor udstrækning arbejder selvstændigt. Bestyrelsen vil hermed rette en stor tak til festudvalget for en virkelig fin nytårsfest. Foreningen har for tiden 104 me medlemmer. Det er meget fint i men det er ikke helt nok for jo flere medlemmer des flere muligheder er der for at udvide aktiviteterne.

Det er en glædelig ting at meddele, at foreningen har fået en butik op at stå. Der er ansat to bestyrere til den daglige drift, nemlig Ragu Murali.

Selv om foreningen ikke har eksisteret mere end fire måneder, er det nu ikke så få ting, som er kommet i gang og det kan vi godt være lidt stolte over, men som sagt med flere medlemmer øges mulighederne for arrangementer og aktivikteter. Tro nu ikke vi bare læner og tilbage og er tilfredse med det allerede opnåede. Der er mange ting i støbeskeen. Fest udvalget planlægger en tur til Norge engang i slutningen af juli måned med derom nærmere opslag.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Til efteråret er følgende under planlægning:

Tamilsk kulturfest

Film

Mad

Musik

Dans

Børneaktiviteter

Udflugter

Sommerferietiden nærmer sig det vil nok præge Bestyrelsens arbejdsindsats men.når ferien er ovre, trækker vi atter i arbejdstøjet og går i gang med at få arrangemanterne og aktiviteterne i gang.

GOD SOMMERFERIE.

på Bestyrelsens vegne
Gertrud

Alle er velkommen til skrive jeres egen mening om "CHANCHIVE".
I er også velkommen til skrive en artikel og lignende.

SENEST - 12.08.89.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

21.01.89 தொடக்கம் 30.6.89 வரையிலான தமிழ் டெனிஷ் நட்புறவுச் சங்கத்தின் வரவுசெலவுகள்.

REGNSKAB FRA TAMILSK DANSK VENSKABSFORNING FRA DEN. 21.01.89 TIL 30.6.89

| 21.01.89 — 30.6.89 | செலவு UDGIFT | வரவு INDTÆGET |
|---|---|---|
| மொத்தவரவு TOTAL INDTÆGET | | 22492.00 |
| மொத்தச் செலவு TOTAL UDGIFT | 17803.09 | |
| | 17803.09 | 22492.00 |
| கையிருப்பு. INDESTÅENDE | | 17803.09 |
| I BANK - - - - - - - - -> | | 4688.91 |

இந்த வரவு செலவு சம்பந்தமாக மேலதிக விபரங்கள் அறிய விரும்புபவர்கள் கணக்காளருடன் தொடர்பு கொள்ளவும்.

FORENINGS MEDLEMMER ER VELKOMNE TIL AT GENNEMSE REGNSKABET MED ALLE BILAG HOS KASSEREREN.

கணக்காளர் / KASSEREREN

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலாச்சார இல்லம் சம்பந்தமான தகவல்கள்

கலாச்சார இல்லத்திலுள்ள பொருக்கள் சிலவற்றை கடனாகவும் இலவசமாகவும் பயன்படுத்தலாம்

அவையாவன பின்வருமாறு

வீடியோ-கமரா :- இதன் கசற், பற்றறி, ஒளிபடக்காட்சிக் கருவி, தாங்கி (stand) போன்றவற்றை 100KR பணம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆயுதம்/கருவி :- 30-40க்கும் இடையிலான வேறுபட்ட ஆயுதங்களையுடைய ஒரு பெட்டியைக் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம்.

துளைபோடும் கருவி :- மின்சார உதவியுடன் துளை போடும் கருவி-யையும் பெற்றுக் கொள்ளலாம்,

தையல் இயந்திரம் :- மொழிப்பாடசாலையிலோ அல்லது வேறு பாடசாலைகளிலோ தையல் பயின்றிருந்தால் தையல் இயந்திரங்களையும் கடனாய் பெற்றுக் கொள்ளலாம்.

தட்டெழுத்து இயந்திரம் :- நீங்கள் V.U.C யில் அல்லது வேறு பாடசாலையில் தேர்ச்சி பெற்றிருந்தால் தட்டெழுத்து இயந்திரம் ஒன்றையும் கடனாய் பெற்றுக் கொள்ளலாம்.

கதிரைகள் :- உங்கள் இல்லத்தில் நடைபெறும் வைபவங்களுக்கு பயன்படுத்துவதற்கு கதிரைகளையும் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம்.

கு:றி:- ஆனால் நீங்களே கதிரைகளை எடுத்துச் செல்வதற்கும், திருப்பிக் கொடுப்பதற்கும் பொறுப்பேற்க வேண்டும்.

கலாச்சார இல்லத்தில் வைத்தே விக்கும் பொருட்களும் உண்டு.

அவையாவன பின்வருமாறு:-

பிரதியெடுக்கும் இயந்திரம் :- சில குறிப்பிட்ட பிரதிகள் இலவசமாக எடுத்துக் கொள்ளலாம்.

ஆணிதுளைக்கும் இயந்திரம் :- இவ்வியந்திரத்தை விசேட நாணயம் கொண்டு பாவித்தல் வேண்டும், இல்லப் பொறுப்பா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளரிடம் 10 குரோன் பணம் செலுத்தி விசேட நாணயத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
இப்பணத்தின் மூலம் இரைந்தது இயற்று மணித்தியாலங்கள் இயந்திரத்தைப் பயன்படுத்தலாம்.

__வேலைத்தளம் (பட்டறை)__ :- ஆயுதங்களுடனான ஒரு பட்டறையும் இங்குண்டு. துவிச்சக்கர வண்டி, மற்றும் வேறு ஏதாவது இயந்திரம் போன்றவை பழுது பார்ப்பதற்கு இவ் வறையைப் பயன்படுத்தலாம்.

__குளியல் அறை__ :- முதலாம் மாடியிலுள்ள குளியலறையையும் உபயோகிப்பதற்கு வசதிகள் உண்டு. குளியலறைத் திறப்பினை இல்லத்திலுள்ள கடையிலோ அல்லது நிர்வாகப் பீடச் சாலியிலோ பெற்றுக் கொள்ளலாம்.

__பில்லியாட்/மேசைப் பந்தாட்டம்/தரம் போட்__ :- இவ் விளையாட்டுக்கள் விளையாடுவதற்குத் தேவையான உபகரணங்களைக் கடையிலோ, அல்லது நிர்வாகச் சாலியிலோ பெற்றுக் கொள்ளலாம்.

இங்கு குறிப்பிட்டுள்ள விடயங்களைப் பாவிக்க விரும்பின் உங்களிடமுள்ள தமிழ் டெனிஸ் நட்புறவுச் சங்க அடையாள அட்டையையோ அல்லது வெளிநாட்டவர் சங்க அடையாள அட்டையையோ அல்லது உங்களிடமுள்ள மருத்துவ அட்டையையோ கலாச்சார இல்லத்தின் பொறுப்பாளரிடம் ஒப்படைத்து உரியவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

நன்றி.

இப்படிக்கு
(இல்லப் பொறுப்பாளர்)

> பத்திரிகை சம்பந்தமான விமர்சனங்கள், கேள்விகள், ஆக்கங்கள் சகலதும் 12.08.89 க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

www.tamilarangam.net

## கொல்ஸ்ரப்புறே தமிழர் உதைப்பந்தாட்டக் கழக-ம் பற்றிய தகவல்கள்.

கொல்ஸ்ரப்புறே உதைபந்தாட்டக் கழகமானது விளையாட்டு வீரர்கள், ஆதரவாளர்களின் ஒத்துழைப்பால் கடந்த வருடம், ஐந்து பேரைக்-கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு, இருவிளையாட்டுத் தலைவர்களைக் கொண்ட கழகமாக வளர்ச்சியடையத் தொடங்கியது,

1989ம் ஆண்டு ஐந்து பேர் கொண்ட புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு, அவர்களிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டதுடன், இருவிளையாட்டுத் தலைவர்களையும், முப்பத்தேழு அங்கத்தவர்களையும் கழகத்துக்குத் தேவையான சகல பொருட்களையும் உள்ளடக்கியுள்ளது. கழகத்தின் வளர்ச்சிக்காக நம் கழகம்-கொல்ஸ்ரப்போ வாழ் தமிழ் மக்களிடம் உதவியை-நாடிச் சென்றது. இதன் மூலம் பெரும்பான்மையான மக்களின் பண உதவிகளும், ஆதரவும் கிட்டியுள்ளது. அத்தோடு கொல்ஸ்ரப் புறே தமிழ்-டெனிஸ் நட்புறவுச் சங்கமும் மற்றும் வல் பியான் (Vald Birn) தொழிற்சாலையில் வேலை செய்யும் தமிழ் அன்பர்களின் உதவிகளும் எமது கழகத்துக்குப் பிரத்தியேகமாக கிடைத்துள்ளது.

இவர்கள் அனைவருக்கும் எமது கழகம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது. கழக வளர்ச்சி கருதி இது போன்ற உதவிகளை மேலும் நல்குவீர்கள் என எமது கழகம் நம்புகின்றது.

எமது கழகம் இதுவரை ஐந்து சிநேகபூர்வமான போட்டியில் பங்கு பற்றியுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

> உங்களை ஒருவர் விமர்சித்தால் எரிச்சல் வருகிறதா?
> அப்படியானால் அந்த விமர்சனம் சரியானது தான்
> — டாக்டஸ் —

www.tamilarangam.net

| | மைதானம் | கழகங்கள் | திகதி | முடிவுகள் |
|---|---|---|---|---|
| 1. | கொல்ஸ்ரப்புரோ | கொல்ஸ்/கிறின்சட் | 23/4/89 | (Ho)-2 – 3(Gr) |
| 2. | ஈ.காஸ்ற் | கொல்ஸ்/ஈகாஸ்ற் | 13/5/89 | (Ho)2 – 1(Ik) |
| 3. | ஸ்ருவர் | கொல்ஸ்/ஸ்ருவர் | 15/5/89 | (Ho)2 – 2(St) |
| 4. | வயலி | கொல்ஸ்/வயலி | 20/5/89 | (Ho)0 – 1(V) |
| 5. | கொல்ஸ்ரப்புரோ | கொல்ஸ்/ராம் | 27/5/89 | (Ho)1 – 3(T) |

மேலும் விளையாட விரும்புவோரும் பயிற்சி பெற விரும்புவோரும் எம் கழகத்தோடு வந்திணைந்து கொள்ளலாம். பயிற்சி கொடுக்கப்படும் நாட்கள், புதன்கிழமை வெள்ளிக்கிழமை, மாலை 6-7.30 மணிவரை. மற்றைய நாட்களில் மாலை 5:30 7மணிவரை விளையாட்டு நடைபெறும். புதிதாக அங்கத்தவர்களாக விரும்புவர்கள் எமது நிர்வாகத்தோடு தொடர்பு கொள்ளவும்.

எமது கழகத்தின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் உங்கள் எல்லோரது ஆதரவையும் உதவியையும் தந்து எமது கழகத்தை மேலும் மேலும் வளர்ச்சியடையச் செய்வீர்கள் என்று நம்புகின்றோம்.

நன்றி

உதைபந்தாட்டக்குழு
கொல்ஸ்ரப்புரோ

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பிறருக்கு உதவி செய்கின்றீர்களோ இல்லையோ பிறரை உபத்திரம் செய்யாமல் இருந்தால் அதுவே போதும். பிறருக்கு உதவுவது நம் வசதியைப் பொறுத்தது. பிறருக்குக் கெடுதல் செய்யாமல் இருப்பது மனதைப் பொறுத்தது.
- லெங்பெல்லோ - நன்றி கற்கண்டு

www.tamilarangam.net

அன்பான பாவனையாளர்களுக்கு !

தமிழ் - டெனிஷ் நட்புறவுச் சங்கத்தினால் கலாச்சார இல்லத்தில் 24.05.89 தொடக்கம் இயங்கிவரும் பல சரக்குக் கடையின் வளர்ச்சிக்கு உங்களுடைய ஒத்துழைப்பை பெருமளவு அன்புடனும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

எதிர்பார்த்திடும் எல்லாவிதமான பலசரக்குப் பொருட்கள் விற்பனைக்கு உள்ளன. அத்துடன் தமிழ் பழைய- புதிய திரைப்படக் கெசட்டுக்களும் வாடகைக்கு விடப்படும்.

இங்ஙனம்
தமிழ் - டெனிஷ் நட்புறவுக்கழகம்.

கடை திறக்கும் நேரங்கள்.

| | |
|---|---|
| திங்கள் — வியாழன் | 10.00 — 19-00 |
| வெள்ளி | 10.00 - 20.00 |
| சனி | 10.00 - 18.00. |
| ஞாயிறு | 11.00 - 18.00 |

KOM OG BESØG UNIKKEN BUTIKKEN

TAMIL DANSK VENSKABSFORENING HAR ÅBNET EN BUTIK I KULTURHUSET, MED SPECIAL VARER FRA SRILANKA, DEN NÆRE ORIENT, AFRIKA, MELLEMAMERIKA OG FJERØSTEN.


BUTTIKEN HAR ÅBENT

| | |
|---|---|
| MANDAY-TORSDAG | 10⁰⁰-19⁰⁰ |
| FREDAG | 10⁰⁰-20⁰⁰ |
| LØRDAG | 10⁰⁰-18⁰⁰ |
| SØNDAG | 11⁰⁰-18⁰⁰ |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீடு - UDGAVE

தமிழ் டெனிஸ் நட்புறவுச் சங்கம்

TAMILSK DANSK VENSKABSFORENING

DANMARKSGADE 10, 7500 HOLSTEBRO.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்